## இலயோலாகல்லூரி

## முன்னாள் மாணவர் சங்கம்

# “படைப்பாளிகளின் சங்கமம் ”

மார்ச்சு 11, 2016

நன்றி

அருள் முனைவர் ஞா. ஜோசப் அண்டனி சாமி, சே.ச, முதல்வர்

முன்னாள் மாணவர் சங்கத்தின் இயக்குநர்

## தொடக்கவிழா(9.00மணி -10.00மணி)

☆இலயோலா கல்லூரி மேனாள் மாணவர் சங்கத்தின் சார்பாக படைப்பாளிகளின் சங்கமம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் மார்ச்சு 11, 2016 அன்று இலயோலா கல்லூரியில் நடைபெற்றது. இச்சங்கத்தின் சார்பாக நடத்தப்பட்ட முதல் கருத்தரங்கம் இதுவாகும்.

☆தொடக்கவிழாவில் இலயோலா கல்லூரி மேனாள் மாணவர் சங்கத்தின் இயக்குநரும், கல்லூரி முதல்வருமான அருள் முனைவர் ஞா. ஜோசப் அண்டனிசாமி,சே.ச. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

☆கல்லூரியின் மேனாள் மாணவர் திரு. இராமசுப்பிரமணி வாழ்த்துரை வழங்கினார்.

☆கருத்தரங்கின் அமைப்பாளர் திரு.சதானந்தம் அறிமுகவுரையாற்றினார்.

☆சிறப்பு விருந்தினராக பொதிகைத் தொலைக்காட்சியின் இணை இயக்குநரும் நம் கல்லூரியின் மேனாள் மாணவருமான முனைவர். பாலரமணி அவர்கள் சிறப்புரையாற்றினார்.






## முதல் அமர்வு - எழுத்தாளர்கள் (10.00மணி -11.00மணி)

☆முதல் அமர்வு எழுத்தாளர்கள் என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது. அருள் முனைவர் . இன்னாசிமுத்து,சே.ச. அவர்கள் தலைமைவுரை நிகழ்த்த, சாகித்ய அகடாமி விருது பெற்ற எழுத்தாளர் திரு. டிக்குரோஸ் அவர்களும் திரு. ராம்மோகன் அவர்களும் எழுத்தாளர்களின் சிறப்பு பற்றி உரை நிகழ்த்தினர்.






## இரண்டாவது அமர்வு -மொழி பெயர்ப்ப, மற்றும்  பதிப்பாளர்கள் (11.00மணி -12.00மணி)

☆இரண்டாவது அமர்வு மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளர்கள் என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது. இந்த அமர்வின் தலைவராக அருள் முனைவர் ம. ஆல்பர்ட் வில்லியம், சே.ச. தலைமை வகித்தார். மொழிபெயர்ப்பியல் பற்றி முனைவர் எஸ்.ஏ.இராசராசன் (தமிழ்த்துறைபேராசிரியர், இலயோலாகல்லூரி) உரை நிகழ்த்தினார். பதிப்பாளர்கள் என்ற தலைப்பில் திரு. ரவி தமிழ்வாணன் தம்முடைய கருத்துக்களை வழங்கினார்.







## மூன்றாவது அமர்வு  சிந்தனையாளர்கள் - மற்றும் சமூகச் சேவை (12.00மணி -1.00மணி)

☆ மூன்றாவது அமர்வு சிந்தனையாளர்கள் மற்றும் சமூகச் சேவை என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பட்டது. இந்த அமர்வின் தலைவராக அருள்தந்தை. செபாஸ்டின்,சே.ச. பொறுப்பேற்று தலைமை தாங்கினார் சிறந்த சிந்தனையாளர்கள் பற்றி திரு. சு. சதானந்தம் அவர்கள் உரை நிகழ்த்தினார். சமூக நல செயல்பாடுகள் பற்றி திருமதி. பியூலா ஷீலா அவர்கள் உரை நிகழ்த்தினார். பகல் 1.00 மணிக்கு மூன்றாவது அமர்வு நிறைவு பெற்றது.







## நான்காம் அமர்வு - சாதனையாளர்கள் (2.00மணி -3.00மணி)

☆ நான்காம் அமர்வு சாதனையாளர்கள் என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது. இந்த அமர்வின் தலைவராக முனைவர். தன்ராஜ் அவர்கள் தலைமை தாங்கினார். மருத்துவத்தின் சிறப்பு குறித்து டாக்டர் நாராயணபாபு, முதல்வர், KMC, திரைப்படத் துறையில் உள்ள சிக்கல்கள் மற்றும் சிறப்புகள் குறித்து இயக்குநர் பிரம்மா அவர்கள் உரை நிகழ்த்தினார்கள்.







## ஐந்தாவது அமர்வு - திரைத்துறை (3.00மணி -4.00மணி)

☆ஐந்தாவது அமர்வு திரைத்துறை என்ற தலைப்பில் நடைப்பெற்றது. அருள்தந்தை. மரியவெனிஸ், சே.ச. அவர்கள் தலைமை தாங்கினார். முதுநிலை தயாரிப்பாளர் பிரதீப் அவர்களும், இயக்குநர் வெற்றிமாறன் அவர்களும் விஜய் தொலைக்காட்சியின் சின்னத்திரை நடிகர் ஷியாம் அவர்களும், ஊடகம் குறித்து உரை நிகழ்த்தினார்கள்.







## நிறைவுவிழா - 4.00மணி -5.00மணி

☆நிறைவு விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் அருள் முனைவர் ச. லாசர்,சே.ச. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற நீதியரசர் சந்துரு அவர்களைஅறிமுகம் செய்தும், சாதனைப் படைத்த மேனாள் மாணவர்களை வாழ்த்தியும் கல்லூரி முதல்வரும், மேனாள் மாணவர் சங்கத்தின் இயக்குநருமான அருள் முனைவர் ஞா. ஜோசப் அண்டனி சாமி,சே.ச. அவர்கள் உரையாற்றினார். நீதியரசர் சந்துருவின் சிந்தனை மிக்க சொற்பொழிவு செவிகளுக்கு விருந்தளிப்பதாக இருந்தது.






## பாராட்டும் சிறப்பும்

☆மேலும் சாதனை படைத்துவரும் நம் கல்லூரியின் மேனாள் மாணவர்கள் 45 பேருக்குப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இக்கருத்தரங்கில் மேனாள் மாணவர்கள் 70 பேர் பங்கேற்றனர். இக்கருத்தரங்கம் அனைவரும் பாராட்டும் வகையில் மிகவும் சிறப்பாக அமைந்தது.






## விழா உறுப்பினர்கள்

இக்கருத்தரங்கின் அமைப்பாளராக திரு.சதானந்தம் அவர்களும் குழு உறுப்பினர்களாக முனைவர் தன்ராஜ், முனைவர் மோ. பாட்டழகன், திரு. வேணுகோபால், திரு. எட்வின் மற்றும் ஆலோசகர்களாக முனைவர் மேரிசொர்ணாம்பாள், முனைவர் ஜே.மேரி விமலக் குமாரி கலையரசி, முனைவர் ரேவதி ராபர்ட் ஆகியோர் செயலாற்றினார்கள். மேனாள் மாணவர் மைக்கேல் பல்வேறு பொருள்களின் மூலம் பலவித இசை இன்பத்தை வழங்கினார். இக்கருத்தரங்கில் இயற்கை முறையில் அமைந்த அறுசுவை உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மங்கல இசை முழங்க, மங்கலப் பொருள்களால் வரவேற்பு நிகழ்த்திய விதமும் பார்வையாளர்களை பரவசபடுத்துவதாய் அமைந்தது.



அனைவரையும் ஒன்றிணைத்து விழாவைச் செம்மையுற வடிவமைத்தவர் அருள் முனைவர் ஞா. ஜோசப் அண்டனிசாமி, சே.ச. அவர்கள் பாராட்டிற்குரியவர் என்பதை முன்னாள் மாணவர் சங்கம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. இக்கருத்தரங்க நிகழ்விற்கு தொகுப்பாளராக சிறப்பாக பணியாற்றிய செல்வி ஜமிமா (முன்னாள் மாணவி) அவர்களுக்கும் மேலும் இக்கருத்தரங்கிற்கு அலுவலக ஒருங்கிணைப்பாளராக உதவிய திரு.ப. லாரன்ஸ் டிக்ருஸ் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.